தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2012
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition 2012
Australian Society of Graduate Tamils

# வினாடி வினா - மாதிரி வினாக்கள்

## இலக்கியம் - Literature

1. திருக்குறளின் இரண்டாவது அதிகாரம் எது?
2. கம்பராமாயணத்தின் கடைசிக் காண்டம் எது?
3. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?
4. "ஆத்திசூடியை" இயற்றியவர் யார்?
5. பெரிய புராணத்தை இயற்றியவர் யார்?
6. மகாபாரதத்தை தமிழிற் பாடியவர் யார்?
7. சீறாப் புராணம் என்ற இஸ்லாமியக் காப்பியத்தை இயற்றியவர் யார்?
8. நக்கீரர் இயற்றிய நூல் ஒன்று தருக
9. 'வெற்றி வேற்கை' எனும் நீதிநூலை இயற்றியவர் யார்?
10. திருக்குறளுக்கு உரை எழுதியவர் ஒருவர் பெயர் தருக
11. 'குயில் பாட்டு' என்ற காவியத்தை எழுதியவர் யார்?
12. 'ஓம் எனப் பெரியோர்கள்' என்று தொடங்கும் பாரதியார் எழுதிய காவியம் எது?
13. சிலப்பதிகாரத்தின் கதாநாயகன் யார்?
14. சாண்டில்யன் எழுதிய 'கடல் புறா'வின் கதாநாயகன் யார்?
15. கல்கியின் 'பொன்னியின் செல்வன்' காவியத்திற்கும் Tolkien இன் 'Lord of the Rings' காவியத்திற்கும் ஒற்றுமை ஒன்றை தருக?
16. 'அன்னை இட்ட தீ', 'மண் சுமந்த மேனியர்' ஆகிய நூல்களை எழுதியவர் யார்?
17. "இலங்கை வளம் கேளாத செவி என்ன செவியோ? இரும்பாலே செம்பாலே செய்திட்ட செவியோ?" என்று இலங்கையைப் போற்றிய புலவர் யார்?

18. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று தொடங்கும் கவிதை வரிகளை கூறிய இந்தியக் கவிஞர் யார்?

19. குழந்தைக் கவிஞர் அம்பி அவர்களின் இயற் பெயர் என்ன?

20. ‘பத்தண்ணா’, ‘அண்ணாவியர்’ என்று அழைக்கப்படும் மெல்பொர்னில் வசிக்கும் நாடகக்கலைஞர் யார்?

## மொழி - Language

1) எதிர்ச் சொல் தருக? காய்

2) எதிர்ச் சொல் தருக? இயற்கை

3) எதிர்பாற் சொல் தருக? கணவன்

4) எதிர்பாற் சொல் தருக? நண்பன்

5) நாம் தரும் வடசொல்லுக்கு தமிழ்ச் சொல் தருக?

சுபமுகூர்த்தம்

6) நாம் தரும் வடசொல்லுக்கு தமிழ்ச் சொல் தருக?

பதம்

7) எதிர்ச் சொல் தருக? இகழ்

8) எதிர்ச் சொல் தருக? கொள்வனவு

9) எதிர்பாற் சொல் தருக? புதல்வன்

10) எதிர்பாற் சொல் தருக? காதலன்

11. பின்வரும் சொல்லைப் பிரித்துச் சொல்லுங்கள்

இன்சொல்

12. பின்வரும் சொல்லைப் பிரித்துச் சொல்லுங்கள்

சிற்றறிவு

13. பின்வரும் சொல்லைப் பிரித்துச் சொல்லுங்கள்

 செங்கோல்

14. பின்வரும் சொல்லைப் பிரித்துச் சொல்லுங்கள்

 நாளிதழ்

15. இந்த வசனம் எந்த காலத்தை குறிக்கின்றது?
 "தூங்குகின்ற புலியைத் தட்டி எழுப்பினான்"

16. இந்த வசனம் எந்தக் காலத்தைக் குறிக்கின்றது?
 "சுனாமி (கடற்கோள்) வந்தால் பெரிய அழிவு வரும்"

17. "புத்தகத்தைப் படி" என்னும் வசனத்தில் தோன்றா எழுவாய் எது?

18. "அரவிந்தன் கடைக்குச் சென்று வாழைப்பழங்கள் வாங்கிவந்தான்" எனும் வாக்கியத்தில் எழுவாய் எது?

19. பின்வரும் உவமையைப் பூர்த்தி செய்க.
 "சேற்றில் முளைத்த _______________"

20. பின்வரும் பழமொழியைப் பூர்த்திசெய்க "குற்றமுள்ள நெஞ்சு"

## வரலாறு – History

1. சோழர்களின் தலைநகரம் ஒன்றைக் கூறுக
2. 'சோழவளநாடு சோறுடைத்து' என்று சொல்லப்படக் காரணமான நதி எது?
3 யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்களின் தலைநகர் எது?
4. யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னன் யார்?
5. சிலப்பதிகாரம் தந்த இளங்கோ அடிகள் எந்த அரசர் குலத்தவர்
6. மாமல்ல புரத்தை உருவாக்கிய தமிழ் மன்னன் யார்?
7. இலங்கையில் தொண்டைமானாற்றை வெட்டிய சோழப் படைத்தலைவன் யார்?

8. இலங்கையின் கடைசித் தமிழ் மன்னன் யார்?

9. மீன் கொடியைக் கொண்ட தமிழ் அரச வம்சம் எது?

10. வில்லைத் தமது கொடியில் கொண்ட தமிழ் அரச வம்சம் எது?

## தற்காலத் தமிழ் வரலாறு - History

1) தமிழ் நாட்டின் தற்போதைய முதல் அமைச்சர் யார்?

2) நியூ சவுத் வேல்ஸில் உயர் பாடசாலைக் கல்விக்கு (HSC) தமிழ் ஒரு பாடமாக்கப்பட்ட வருடம்? அல்லது முதல் முறை பரீட்சை நடைபெற்ற வருடம்?

3) அவுஸ்திரேலியாவில் முதல் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகை எது?

4) தமிழ் உலகம், தமிழ்ப் பத்திரிகை வெளிவந்த நகர்?

5) இந்த வருட ஆரம்பத்தில் அவுஸ்திரேலியாவில் தமிழ் எழுத்தாளர் விழா கொண்டாடப்பட்ட நகர் எது?

6) அடுத்த வருடம் அவுஸ்திரேலியாவில் தமிழ் எழுத்தாளர் விழா கொண்டாடப்பட இருக்கும் நகர் எது?

7) சிட்னியில் முதலில் தொடங்கப்பட்ட தமிழ்ப் பாடசாலை எது?

8) சிட்னியில் பாலர் மலர் தமிழ்ப் பாடசாலை எப்பொழுது தொங்கப்பட்டது?

9) சிட்னியில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டன?

10) சிட்னியில் வடஇலங்கை சங்கீத சபையின் பாடத்திட்டத்திற்கேற்ப மாநில மட்டத்தில் சங்கீதப் பரீட்சைகள் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டன?

**தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2012**
**அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்**
**Tamil Competition 2012**
**Australian Society of Graduate Tamils**

## மொழி ஆட்சி - Command of Language

மேல்வரும் தொடர்களை வசனமாக அமைக்கவும்

1. போனால் போகிறது
2. இரப்போர்க்கு இடு
3. செய்வன திருந்தச் செய்
4. வெற்றி வேண்டுமா?
5. நல்ல மாட்டிற்கு ஒரு சூடு .........

6. தம்பி சட்டை போட்டான், என்பது போல்
தம்பி வேட்டி --------------------------

7. தங்கை சட்டை போட்டாள் என்பது போல்
தங்கை சேலை ---------------------------

8. அம்மா இடியப்பம் அவித்தார் என்பது போல்
அம்மா தோசை -----------------------

9. அம்மா இடியப்பம் அவித்தார் என்பது போல
அம்மா பிட்டு --------------------------

10. பகலில் வெய்யில் எறிக்கும் என்பது போல
இரவில் பனி ---------------------

## பொதுக் கேள்விகள் - General Questions

1. திராவிட மொழிகளில் இரண்டைக் கூறுக?
2. முத்தமிழ் என்பது எதைக் குறிக்கும்?
3. புனைபெயர் என்றால் என்ன?
4. சுயசரிதை என்றால் என்ன?
5. தமிழ் புது வருடம் எந்த மாதத்தில் கொண்டாடப்படுகிறது?
6. உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு முதல் முதலில் எங்கே நடைபெற்றது?
7. "பஞ்சமாபாதகங்கள்" என்று கூறப்படுபவை யாவை?
8. ஐம்புலன்கள் என்று சொல்லப்படுபவை யாவை?

9. பஞ்சபூதங்கள் யாவை?
10. திருக்குறளின் மூன்று பாகங்கள் எவை?